## மாணவர்கள் – பொதுமக்களைப் போலிச் செய்தி, வெறுப்புப் பேச்சு, அறிவியலுக்குப் புறம்பான கருத்துகளிலிருந்து மடைமாற்றி பகுத்தறிவுப் பாதையில் வழி நடத்தும் நோக்கில்

# ‘ஏன்? எதற்கு? எப்படி’ என்ற தலைப்பில் - 8 பிரிவுகளில் விழிப்புணர்வுப் போட்டிகள்!

## ‘ஊடக மையம் – தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம்’ இணைந்து நடத்துகின்றன!

சென்னை, அக்.8-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் நாட்டின் கல்வி, ‘சமூக நீதி மற்றும் அறிவியல் மனப்பான்மையை வளர்க்க அடித்தளமாக அமையும்’ என்று அறிவுறுத்தியிருந்தார். அந்த வழிகாட்டுதலின்படி, மாணவர்கள் மற்றும் பொதுமக்களைப் போலிச் செய்தி, வெறுப்புப் பேச்சு, அறிவியலுக்குப் புறம்பான கருத்துகள் போன்றவற்றிலிருந்து மடைமாற்றி, பகுத்தறிவுப் பாதையில் வழிநடத்தும் நோக்குடன் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ஊடக மையத்துடன் இணைந்து, தமிழ்நாடு தகவல் சரிபார்ப்பகம், “ஏன்? எதற்கு? எப்படி?” என்ற தலைப்பில் 8 பிரிவுகளில் விழிப்புணர்வுப் போட்டிகளை நடத்தவுள்ளது.




**சமூக ஊடகத்தின் சவால்களான போலிச் செய்தியும் வெறுப்புப் பேச்சும்**

ஐக்கிய நாடுகளின் ஆய்வு ஒன்றில், சமூக வலைதளங்களில் பதிவிடும் படைப்பாளிகளில், மூன்றில் இரண்டு பங்கு நபர்கள், முறையாக சரிபார்க்கப்படாத தகவல்களைத் தான் பதிவிடுகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வகையில், தொழில்நுட்ப மேம்பாட்டின் பாதகமாய்ப் போலிச் செய்தி பரவல் உருவெடுத்துள்ளது. அரசுக்கு எதிராகவும், மக்களைத் திசை திருப்பவும், சமூகத்தில் குழப்பத்தை விளைவிக்கவும், கருத்துருவாக்கம் செய்யவும் இவை பரப்பப் படுகின்றன.

போலிச் செய்திகளைப் போலவே தீவிரமான விளைவுகளைக் கொண்டது வெறுப்புப் பேச்சு. தனி மனிதர்களையும் மக்கள் குழுக்களையும், அவர்களின் சாதி, மதம், இனம், மொழி, பாலினம் உள்ளிட்ட அடையாளங்களுக்காகக் குறிவைத்து, தவறான கருத்துகளைப் பரப்பி, பாதிப்புக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது வெறுப்புப் பேச்சு.

சமூக நல்லிணக்கத்தைச் சீர்குலைத்து, சமத்துவப் பாதையில் முன் நகரும் தமிழகத்தைப் பின்னோக்கி இழுக்கிறது இந்த வெறுப்புக் கலாச்சாரம்.

**தேவை அறிவியல் மனப்பான்மையும் சமூக நீதியும்**

பெருகிவரும் சமூக ஊடகப் பயன்பாட்டில் போலிச் செய்திக்கும், வெறுப்புப் பேச்சுக்கும் இரையாகாமல் பொதுமக்கள் பாதுகாக்கப்பட, சிந்தனையளவிலும் செயலளவிலும் பகுத்தறிவு, அறிவியல் மனப்பான்மை, சமத்துவம், சமூக நீதி போன்றவை அடித்தளங்களாய் அமைய வேண்டும்.

மேற்கண்ட உயர் பண்புகளை மாணவர்களும் பொது மக்களும் வளர்த்துக் கொள்ள அவசியமாய்த் தேவைப்படுவது, கேள்வி கேட்கும் மனப்பாங்கும் அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில் சிந்திக்கும் திறனும் தான்.

இதற்கான விதைகளை அவர்களின் தனித்திறமைகளின் வழி விதைத்திட ஏதுவாக, “ஏன்? எதற்கு? எப்படி?” என்ற தலைப்பில் 8 பிரிவுகளில், பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கு பெறும் வகையில், சமூக ஊடகங்களான எக்ஸ் தளம் (X), இன்ஸ்டாகிராம் (Instagram), ஃபேஸ்புக் (Facebook), வாட்ஸ்அப் (WhatsApp), மற்றும் யூட்யூப் (YouTube) வாயிலாகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளும் அதன் விதிமுறைகளும் பின்வருமாறு;

**பேச்சுப்போட்டி தலைப்புகள் ( வயதுவரம்பு கிடையாது )**

1. இந்தியாவின் மதச்சார்பின்மையின் முக்கியத்துவம்.
2. அறிவியல் மனப்பான்மை ஏன் அவசியம்?
3. வெறுப்புப் பேச்சை விட்டொழிப் போம்.
4. டிஜிட்டல் உலகில் பகுத்தறிவின் அவசியம்.
5. சமூகநீதி காக்க இடஒதுக்கீடு.
6. நான் கண்ட போலிச்செய்தி.

(நீங்கள் கண்ட ஒரு போலிச் செய்தி குறித்தும் அதன் விளைவுகள் குறித்தும் பேசலாம்)

மேற்கண்ட ஏதாவது ஒரு தலைப்பில் 3 நிமிடங்களுக்கு மிகாமல் வீடியோவாக எடுத்து அனுப்ப வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த 10 போட்டியாளர்களுக்கு சென்னையில் இரண்டாம் சுற்று நடைபெறும்.

**கட்டுரைப் போட்டி தலைப்புகள் ( யதுவரம்பு கிடையாது)**

1. அனைவரும் சமம்.
2. மதச்சார்பற்ற இந்தியா.
3. போலிச்செய்தியைப் புறக்கணிப்போம்.
4. சமூகநீதியில் முன்னோடியாய் விளங்கும் தமிழ்நாடு.
5. சமூகநீதி காக்க இட ஒதுக்கீடு.
6. பெண்ணியம் பேசுவோம் ஆண்களே.

குறிப்பு மேற்கண்ட தலைப்புகளுள் ஏதேனும் ஒரு தலைப்பில் ஏ4 தாளில் 3 பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதி WORD அல்லது PDF கோப்புகளாக அனுப்பி வைக்க வேண்டும்.

**கவிதைப் போட்டி தலைப்புகள் (வயதுவரம்பு கிடையாது)**

1. மெய்ப்பொருள் காண்பது அறிவு
2. பிறப்பால் அனைவரும் சமம்
3. பண்படுத்தும் பகுத்தறிவு

குறிப்பு மேற்கண்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றுக்கு 16 வரிகளுக்கு மிகாமல் மரபுக்கவிதை அல்லது புதுக்கவிதை எழுதி WORD அல்லது PDF கோப்பாக அனுப்ப வேண்டும்.

**வாசகம் எழுதும் போட்டி**

போலிச் செய்தி மற்றும் வெறுப்புப் பேச்சுக்கு எதிராகவும், சமத்துவம், மதச்சார்பின்மை மற்றும் அறிவியல் மனப்பான்மையை ஊக்குவிக்கும் விதமாகவும் வாசகங்களை எழுத வேண்டும்.

குறிப்பு ஒருவர் எத்தனை வாசகங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். வாசகங்கள் இதுவரை வெளிவராதவையாகவும், சொந்த படைப்பாகவும் இருக்க வேண்டும்.

**குறும்படப் போட்டி**

1. கருத்துச் சுதந்திரமும் வெறுப்புப் பேச்சும்
2. சமூகநீதி போற்றும் தமிழ்ச் சமூகம்
3. பகுத்தறிவும் அறிவியலும் தலைமுறை மாற்றத்தின் அடித்தளம்

குறிப்பு குறும்படங்கள் 1 நிமிடம் 30 வினாடிக்குள் இருக்க வேண்டும்.

**மீம் தயாரித்தல் போட்டி**

1. போலிச் செய்திகளும் செயற்கை நுண்ணறிவும் (AI)
2. அறிவியல் மனப்பான்மை
3. தகவல் சரிபார்ப்பு
4. மதச்சார்பின்மை
5. சமத்துவ இந்தியா

குறிப்பு மீம்களை JPG, PNG கோப்புகளாக அனுப்ப வேண்டும்.

**புகைப்படப்போட்டி**

1. கருத்து சுதந்திரமும் வெறுப்புப் பேச்சும்
2. சமூகநீதி போற்றும் தமிழ்ச்சமூகம்
3. பகுத்தறிவும் அறிவியலும் தலைமுறை மாற்றத்தின் அடித்தளம்

குறிப்பு புகைப்படங்களை JPG, PNG கோப்புகளாக அனுப்ப வேண்டும்.

**ஓவியப்போட்டி**

1. அனைவரும் சமம்
2. மனிதம் போற்றுவோம்
3. அன்பை அந்நியமாக்கும் வெறுப்புப் பேச்சு

குறிப்பு ஆகிய தலைப்புகளை உள்ளடக்கமாகக் கொண்டு ஓவியங்கள் அமைய வேண்டும். PDF, JPG, PNG கோப்புகளாக அனுப்பி வைக்க வேண்டும்.

தங்கள் படைப்புகளை கீழ்கண்ட கீயூ ஆர் கோட்டினை ஸ்கேன் செய்து அல்லது மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பி வைக்கலாம்.

TNDIPRMHOCT@GMAIL.COM

மேலும் போட்டிகள் பற்றி அறிய கீழ்கண்ட QR கோட்டினை ஸ்கேன் செய்யவும்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## அரசு கலை – அறிவியல் கல்லூரிகளில்

# 2,708 உதவி பேராசிரியர்கள் நிரந்தரமாக நிரப்பப்படுவார்கள்!

## உயர் கல்வித்துறை அமைச்சர் – முனைவர் கோவி. செழியன் அறிவிப்பு!

**சென்னை, அக்.8–**

**உயர்கல்வியில் தமிழ்நாடு என்றென்றும் முதன்மை இடத்தில் திகழ பல்வேறு முன்னெடுப்பு களை மேற்கொண்டு வரும் நமது முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,708 உதவி பேராசிரியர்கள் நிரந்தர மாக நிரப்பப் படுவார்கள் என உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளதாவது:**



மருத்துவமும் உயர்கல்வியும் தனது இரு கண்களாகக் கொண்டு ஒவ்வொரு நாளும் அதன் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் நமது முதலமைச்சர் அவர்கள்.

உயர்கல்வியில் நமது மாணாக்கர்கள் என்றென்றும் உயர்ந்த நிலையில் திகழ வேண்டும் என்பதற்காகவும் தொழில்நுட்பத் துறையில் உலக நாடுகளுக்கிடையே உள்ள போட்டியிலே வென்றெடுக்க நமது மாணவர்கள் சிறந்தவர்களாக விளங்க வேண்டும் என்ற எண்ணத்திலும், வேலை தேடுபவராக இல்லாமல் தொழில் முனைவோராக திகழ வேண்டும் என்பதற்காக மாணாக்கர்கள் தாங்கள் தேர்ந்தெடுக்கும் துறைகளில் முதல்வராக திகழ வேண்டும் என்ற ஒரே நோக்கில் ‘நான் முதல்வன்’ என்ற முத்தான திட்டத்தை வழங்கி அனைத்து மாணவர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கி வருகிறார் நமது முதலமைச்சர் அவர்கள்.

உயர்கல்வி பெற பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காகவும் சுய மரியாதையுடன் உயர்கல்வி பயிலவும் புதுமைப்பெண் ‘தமிழ்ப்புதல்வன்’ போன்ற திட்டங்கள் மூலம் மாதம் ரூபாய் ஆயிரம் வழங்கி வருகிறார் நமது முதலமைச்சர் அவர்கள்.

கடந்த நான்கரை ஆண்டுகளில் 37 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கியதுடன் இதில் இந்த கல்வி ஆண்டு மட்டும் பதினாறு புதிய கல்லூரிகளை அறிவித்து தொடங்கியதுடன் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்களுக்கும் ஒப்புதல் அளித்து சேர்க்கை பெற்றுள்ளனர். நவீன தொழில்நுட்பத்திற்கு ஏற்பவும் அந்தந்த பகுதியில் உள்ள தொழில் முறைக்கு ஏற்ற பல்வேறு புதிய பாடப் பிரிவுகளும் தொடங்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் கல்வி கற்கும் திறன் எவ்வகையிலும் பாதிப்படையக் கூடாது என்ற எண்ணத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2708 உதவிப்பேராசிரியர் பணியிடங்கள் நிரந்தரமாக நிரப்பிட தற்போது முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேற்படி உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் நேரடி நியமனம் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் விரைவில் தேர்வு செய்யப்பட்டு பணியமர்த்தப்படுவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்துள்ளார்.



கோட்டூர்புரத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட 167 உதவியாளர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் துறை முதன்மைச் செயலாளர் மரு.பி.சந்தர மோகன், பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தொடக்கக்கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

# திருவள்ளூர் மத்திய மாவட்ட பாக ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!

*திருவள்ளூர் அக் 08;*

தலைமை கழக அறிவுறுத்தலுக்கு ஏற்ப பாக ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கான வாக்குச்சாவடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. திருவள்ளூர் மத்திய மாவட்டம் மாநகர ஒன்றிய, நகர, பகுதி பேரூர் கழக செயலாளர்களோடு நியமிக்கப்பட்டுள்ள பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Coordinators) இணைந்து தேர்தல் பணிகளை ஆற்றிட ஏதுவாக எடுக்கப்பட வேண்டிய முன்னெடுப்புகள் குறித்து கலந்துரையாடல் கூட்டம் 09-10-2025 நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் ஆவடி மாநகர காவல் ஆணையர் அலுவலகம் எதிரில் அமைந்துள்ள கோல்டன் கிறிஸ் ஹாலில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் எனது தலைமையில் நடைபெறுகிறது இதில் கழக துணை பொதுச்செயலாளரும் மண்டல பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகிறார்



இக்கூட்டத்தில் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும் மாநில ஆதிதிராவிடர் நலத்துறை செயலாளருமான ஆ. கிருஷ்ணசாமி தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், தொகுதி பார்வையாளர்கள் PTC. செல்வராஜ், நிவேதா ஜெசிகா, மாநில இளைஞரணி துணைச் செயலாளர் பிரபு கஜேந்திரன் மாநில சிறுபான்மை நல உரிமை இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்டக் கழக அவைத்தலைவர் மா.ராஜி, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்ரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ் குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி. ராஜேந்திரன், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் கலந்துக் கொள்கின்றனர்கள் எனவே திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பாக ஒருங்கிணைப்பாளர்கள் (Booth Coordinators) அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



புதுடெல்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் 06.10.2025 அன்று நடைபெற்ற வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி தொடர்பான கோரிக்கைகள் மற்றும் மானியங்கள் குறித்த கூட்டத்தில் கழக மாநிலங்களவை உறுப்பினர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் பங்கேற்று பல்வேறு கோரிக்கைகள் வைத்தார்.